**O.S.No.262/2015**

**Date:27.11.2018**

**வாதி தரப்பு சாட்சி 2 - கருப்பையா, த-பெ.பெரியகருப்பன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவாச் சொத்து யாருக்குப் பாத்தியப்பட்டுள்ளது என்றால் எனக்கு பாத்தியப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நான் முத்துச் செல்வம் என்பவருக்கு தாவாச் சொத்து பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த சொத்துக்கு நான் யார் பெயரில் வரி செலுத்துகிறேனா என்றால் ஆனந்தாயி என்பவருக்காக நாங்கள் செலுத்துகிறோம். தாவாச் சொத்து எதற்காக எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் பூஜை செய்வதற்காக கொடுக்கப்பட்டது. தாவாச் சொத்து எங்களுக்கு எப்படி கொடுக்கப்பட்டது என்றால் தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்தார்கள். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் செட்டில்மெண்ட் என்றுதான் உள்ளது என்றாலும், தான செட்டில்மெண்ட் என்று குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். எனவே நான் வழக்குரையில் தான செட்டில்மெண்ட் எனறு சொல்லியுள்ளது பொய்யானது என்றால் சரியல்ல. சமாதியில் பூஜை எந்த நேரம் செய்து வருகிறேன் என்றால் காலை 5 மணி, மாலை 6 மணிக்கு செய்து வருகிறேன். நான் பூஜை செய்கிறேனா என்றால் என் சித்தப்பா பூஜை செய்கிறார். பூஜை செய்வதற்கு எண்ணெய் யார் கொடுப்பது என்றால் யாரும் கொடுக்கவில்லை. ஆனந்தாயி இருக்கும் போது கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. நாங்கள் பூஜை செய்யாததால், தாவா இடத்தை செட்டில்மெண்ட் பத்திரப்படி எங்களிடமிருந்து வாங்கிக் கொள்வார்கள் என்றுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. முத்துச் செல்வனின் வாரிசு யார் என்றால் தெரியும். ஆனந்தாயி சொத்துக்கள் தற்போது யாருக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. செட்டில்மெண்ட் பத்திரத்தில் சொத்துக்களை முறையாக அனுபவிக்க மட்டும்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும், நாங்கள் முறையாக பூஜை செய்யாத காரணத்தினால் எங்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றால் சரியல்ல. ஆனந்தாயி பெயரில் நாங்கள் வரி செலுத்தியுள்ளோம் என்றால் சரிதான். ஆனந்தாயி சொத்துக்கள் அனைத்தும் சீனிவாசன் மற்றும் சசிக்குமார் ஆகியோருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்காது என்றாலும், நானும் முறைப்படி பூஜை செய்யாத காரணத்தினால் எங்களை தாவாச் சொத்திலிருந்து வெளியேற்றி விடுவார்கள் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.